# 4

# "இருப்பதா அல்லது இல்லாது ஒழிவதா"

## (பிலிப்பியர் 1:20-30)

*ஹாம்லெட்* என்பது வில்லியம் ஷேக்ஸ்பியரால் எழுதப்பட்டவற்றில் நன்கு அறியப்பட்ட ஒரு நாடகம் ஆகும்.இந்த நாடகத்தில் நன்கு அறியப்பட்ட ஒருவரியாக உள்ளது, "ஹாம்லெட்" தனக்குத் தானே பேசிக்கொள்ளும் பேச்சின் தொடக்கம் ஆகும்: "இருப்பதா அல்லது இல்லாது ஒழிவதா, - அதுவே கேள்வியாகும்." [1] என்னால் பின்னோக்கி எவ்வளவு தூரம் நினைவுகூர முடியுமோ அவ்வளவு நினைவுகூருகையில், அவைகள் பிரபலமான வார்த்தைகளாக இருந்தன, ஆனால் ஹாம்லெட்டின் கேள்வியை ஒரு இளைஞன் என்ற வகையில் நான் புரிந்துகொள்ளும் வரையில் மாத்திரமே அவை அவ்வாறு இருந்தன. அவர் தற்கொலை செய்து கொள்ளுதல் பற்றிஆழ்ந்து சிந்தித்துக் கொண்டிருந்தார். அவர் வாழ்வு மற்றும் மரணம் ஆகிய இரண்டில் ஒன்றை முடிவு செய்ய முயற்சித்துக் கொண்டிருந்தார்: வாழ்வதா ("இருப்பதா") அல்லது சாவதா (இல்லாது ஒழிவதா). நமது தற்போதய வசனப்பகுதியில், பவுல் வாழ்வதா அல்லது மரிப்பதா எது மிக மேன்மையானது என்ற கேள்வியுடன் போராடினார்:

> ஆகிலும் சரீரத்தில் பிழைத்திருக்கிறதினாலே என் கிரியைக்குப் பலனுண்டாயிருப்பதால், நான் தெரிந்துகொள்ளவேண்டியது இன்னதென்று அறியேன். ஏனெனில் இவ்விரண்டிலும் நான் நெருக்கப்படுகிறேன்; தேகத்தைவிட்டுப் பிரிந்து, கிறிஸ்துவுடனேகூட இருக்க எனக்கு ஆசையுண்டு, அது அதிக நன்மையாயிருக்கும்; அப்படியிருந்தும், நான் சரீரத்தில் தரித்திருப்பது உங்களுக்கு அதிக அவசியம் (வசனங்கள் 22-24).

"நெருக்கப்படுகிறேன்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை, "இரு கைப்புறங்களிலும் கற்சுவர்களைக் கொண்டுள்ள ஒரு குறுகலான இடத்தில் பக்கமாய்த் திரும்ப இயலாமல் நேராக மட்டுமே செல்லக்கூடிய நிலையில் உள்ள பயணி ஒருவரால் பயன்படுத்தப்படும்."[2] இன்றைய நாட்களில் நாம் இதை, அவர் "பாறைகளுக்கும் கடினமான இடத்திற்கும் நடுவில்" இருந்தார் என்ற கூறலாம். வாழுதல் மற்றும் இறந்து போகுதல் என்பவையே இக்கட்டான சூழ்நிலையை உண்டாக்கிய இரு சுவர்களாக இருந்தன.[3]

ஹாம்லெட்டும் பவுலும் ஒரேவிதமான கேள்விகளையே முனைப்புடன் சிந்தித்தனர், ஆனால் அவர்களுக்கு இடையில் நிலவிய நேரெதிரான பண்புதான் எப்படிப்பட்டதாக உள்ளது! ஹாம்லெட் தமது சொந்தக் கையினால் ஏற்படுத்திக் கொள்ளும் மரணத்தைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்துக்கொண்டு இருந்தார், ஆனால்

பவுலோ விளைவைத் தேவனுடைய கரங்களில் ஒப்புவித்துக் கொண்டிருந்தார். ஹாம்லெட் இரண்டு முடிவுகளையுமே விரும்பவில்லை - அவர் வாழ்வினால் அழுத்தப்பட்டிருந்தார், ஆனால் மரணத்திற்குப் பயப்பட்டார்; பவுலுக்கு இரு முடிவுகளுமே நல்லதாகவே இருந்தன![4]

நமது வேதவசனப் பகுதியில் இருந்து நாம், வாழ்வு மற்றும் சாவு ஆகியவற்றைப் பற்றி மதிப்பு மிக்க பாடங்களைக் கற்றுக் கொள்ளுகிறோம். 20 முதல் 30 வரையிலான வசனங்கள், பவுல் வாழ்ந்தாரா அல்லது மரித்தாரா என்பதைப் பற்றி நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ கையாளுகின்றன.

## பவுலின் இக்கட்டான சூழ்நிலை (1:20-24)

நமது முந்திய படிப்பு 20ம் வசனத்துடன் நிறைவடைந்தது: "நான் ஒன்றிலும் வெட்கப் பட்டுப்போகாமல், எப்பொழுதும்போல இப்பொழுதும், மிகுந்த தைரியத்தோடே ஜீவனாலாகிலும், சாவினாலாகிலும், கிறிஸ்து என் சரீரத்தினாலே மகிமைப்படுவாரென்று எனக்கு உண்டாயிருக்கிற வாஞ்சைக்கும் நம்பிக்கைக்கும் தக்கதாய், அப்படி முடியும்." பவுல், நீரோவுக்கு முன்பாகத் தாம் விசாரிக்கப்படுவதன் விளைவு என்னவாக இருந்தாலும் - தாம் விடுவிக்கப்பட்டாலும் (மற்றும் இவ்வாறாக, வாழ்ந்தாலும்) அல்லது நீதிமன்றம் தனக்கு மரண தண்டனையைக் கொடுத்தாலும், கிறிஸ்துவை மகிமைப்படுத்தத் தீர்மானித்தார்.

"ஜீவனாலாகிலும், சாவினாலாகிலும்" என்ற வார்த்தைகள் வாழ்வு மற்றும் மரணம் ஆகியவை பற்றிய "பவுலின் தனிமைப்புலம்பல்"[5] என்று அழைக்கப்பட்டுள்ளதைத் தூண்டிற்று. தொடர்ந்து வரும்வசனங்கள் - வாழ்வதா அல்லது மரிப்பதா, எது தமக்கு நல்லதாக இருக்கும் என்று அவர் தத்துவார்த்தமாகக் கலந்துரையாடுகையில் - பவுலின் எழுத்துக்களில் மிகவும் வழக்கத்திற்கு மாறான பகுதிகளில் ஒன்றைக் கொண்டுள்ளது:

> கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம். ஆகிலும் சரீரத்தில் பிழைத்திருக்கிறதினாலே என் கிரியைக்குப் பலனுண்டாயிருப்பதால், நான் தெரிந்துகொள்ளவேண்டியது இன்னதென்று அறியேன். ஏனெனில் இவ்விரண்டினாலும் நான் நெருக்கப்படுகிறேன்; தேகத்தைவிட்டுப் பிரிந்து, கிறிஸ்துவுடனேகூட இருக்க எனக்கு ஆசையுண்டு, அது அதிக நன்மை யாயிருக்கும்; அப்படியிருந்தும், நான் சரீரத்தில் தரித்திருப்பது உங்களுக்கு அதிக அவசியம் (வசனங்கள் 21-24).

ஏற்கனவே குறிப்பிட்டபடி, ஹாம்லெட்டைப் போல் இல்லாமல் பவுல் தற்கொலையைப் பற்றி முனைப்புடன் சிந்திக்கவில்லை. மாறாக அவர், தாம் தேர்ந்துகொள்ளும் விளைவைப் பற்றித் தமது இருதயத்தில் ஆராய்ந்து கொண்டிருந்தார். இது, இந்த அப்போஸ்தலர் ஒரு தாளின் மையப்பகுதியில் ஒரு கோட்டை வரைந்தது போன்று இருந்தது. ஒரு பத்தியின் மேற்பகுதியில் "ஜீவனுக்கு" என்ற சொற்றொடர் இருந்தது. மற்றொரு பத்தியின் மேற்பகுதியில் "மரணத்திற்கு" என்ற வார்த்தை இருந்தது. பின்பு, செயல்விளைவில் அவர் இரு தலைப்புகளின் கீழ் ஒவ்வொரு மாற்றுச் செயலின் அனுகூலங்களைப்[6] பட்டியலிட்டார்.

### ஜீவனுக்கு ஆதரவானவை

21ம் வசனத்தின் முதல் பாகத்தில் பவுல், வாழ்வதற்கான ஒரு காரணத்துடன் தொடங்கினார்: *ஜீவன் = கிறிஸ்து.* “கிறிஸ்து எனக்கு ஜீவன்.” இது “புதிய ஏற்பாட்டின் மிகச்சிறந்த கூற்றுகளில் ஒன்றாக உள்ளது.”[7] இது பிலிப்பியருக்கு எழுதிய நிருபத்தின் இருதயம் போன்ற மையப்பகுதி என்று அழைக்கப் பட்டுள்ளது.

“எனக்கு” என்பது, வாக்கியத்தில் முதலாவது வந்து தனது வலியுறுத்தத்தைக் கொடுக்கும் கிரேக்கவார்த்தை ஒன்றிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அடிப்படையில் பவுல் “மற்றவர்களுக்கு வாழ்வு என்பது எப்படிப்பட்டதாக இருந்தாலும், *எனக்கு* அது கிறிஸ்துவாக உள்ளது” என்று கூறினார். பிலிப் என்பவரின் மொழிபெயர்ப்பில், “வாழ்வது என்பது என்னைப் பொறுத்த மட்டில் ‘கிறிஸ்துவாகவே’ இருக்கிறது” என்றுள்ளது. கிறிஸ்து, பவுலின் வாழ்வின் தொடக்கமாக, அவரது வாழ்வின் அறைகூவலாக, அவரது வாழ்வின் நோக்கமாக, அவரது வாழ்வின் பலமாக மற்றும் அவரது வாழ்வின் இலக்காக இருந்தது.

நம்மைப் பற்றி விஷயம் என்ன? இந்த வாக்கியத்தை நாம் எவ்வாறு “நிறைவு செய்வோம் என்று ஆழ்ந்து சிந்தியுங்கள்: ________ எனக்கு ஜீவன்.” நம்மில் சிலர் கோடிட்ட இந்த இடத்தை, “பணம்,” “உடைமைகள்,” “புகழ்ச்சி,” “அதிகாரம்” அல்லது “செல்வாக்கு” என்பது போன்ற வார்த்தையைக் கொண்டு நிரப்ப வேண்டியிருக்குமா? உலகத்தில் உங்களுக்கு மிகவும் இன்றியமையாத விஷயமாக இருப்பது எது? அது கிறிஸ்துவாகவா - அல்லது வேறு ஏதேனுமாகவா, எதுவாக உள்ளது? நமக்கு எதுமிகவும் முக்கியமானதாக உள்ளதோ அது நம்மில் செயல் விளைவை ஏற்படுத்துகிறது.

பவுல் தமக்கு நடக்கவிருந்த விசாரணைக்குப்பின்பு தாம் பிழைத்திருக்கக் கூடிய சாத்தியக் கூறு பற்றி ஆழ்ந்து சிந்தித்து, அது சரியாக இருக்கும் என்று அவர் முடிவு செய்தார். அவர் அப்பொழுதும் கிறிஸ்துவுக்கு நெருக்கமாகவே இருப்பார்.

### மரணத்திற்கு ஆதரவானவை

இதற்கு மறுபுறத்தில், அவர் விடுதலை செய்யப்படாதிருக்கலாம், அவர் தமது ஜீவனை இழக்கக் கூடும். (உண்மையில் அவர் இந்தக் காலகட்டத்திற்குப் பல ஆண்டுகளுக்குப் பிற்பாடுதான், ரோமாபுரியில் இரண்டாவது முறையாக சிறைவைக்கப்பட்டிருக்கையில் மரணத்திற்கு உட்படுத்தப்பட்டார்.) 21ம் வசனத்தின் கடைசிப் பகுதியில் பவுல், இந்தச் சாத்தியக்கூறு தம்மை கவலைப்படுத்தாது இருந்தது ஏன் என்பதற்குக் காரணத்தைக் கொடுத்தார்: *சாவு = ஆதாயம்.* “… சாவு எனக்கு ஆதாயம்.” 23ம் வசனத்தில் பவுல், தமது மரணத்தின் மிகவும் ஆச்சரியமான விளைவைக் குறிப்பிட்டார்; ஆனால் இந்த வேளைக்கு நாம், மிக அதிகமாக இவ்வுலகம் சார்ந்த ஆதாயம் ஒன்றைப் பற்றி ஆழ்ந்து சிந்திப்போம். அவர் சாவில் *நிம்மதியைக்* கண்டடைவார். அவர் களைப்பாக இருந்திருக்க வேண்டும். பிலிப்பியருக்கு எழுதிய நிருபம ானது, அவர் கடந்த காலத்தில் சகித்திருந்த மற்றும் அவ்வேளையில் சகித்துக் கொண்டிருந்த துன்பங்கள் பற்றி பல குறிப்புகளைக் கொண்டுள்ளது (1:7, 13, 17, 30; 4:3, 14). இத்துடன் கூடுதலாக, அவரது எழுத்துக்களில் இருந்து எடுக்கப்பட்ட மற்ற சாராம்சங்கள், அவர் எந்த அளவிற்கு இளைப்புள்ளவராக

இருந்திருக்க வேண்டும் என்பதைப் பற்றிய கருத்தை நமக்குத் தருகின்றன. ஏறக்குறைய பிலிப்பியருக்குப் பவுல் எழுதிய இதே வேளையில், பிலேமோனுக்கு எழுதிய நிருபத்தின் 8ம் வசனத்தில் அவர் தம்மைப் பற்றி, "ஆகையால், பவுலாகிய நான் முதிர்வயதுள்ளவனாகவும், இயேசுகிறிஸ்துவினிமித்தம் இப்பொழுது கட்டப்பட்டவனாகவும் இருக்கிறபடியால்" என்று விவரித்தார். 2 கொரிந்தியர் 11:23-28ல் அவர் தமக்கு நேர்ந்த சோதனைகளைப் பட்டியலிட்டார்:

> *அவர்கள் கிறிஸ்துவின் ஊழியக்காரரா? நான் அதிகம்; புத்தியீனமாய்ப் பேசுகிறேன்; நான் அதிகமாய்ப் பிரயாசப்பட்டவன், அதிகமாய் அடிபட்டவன், அதிகமாய்க் காவல்களில் வைக்கப்பட்டவன், அநேகந்தரம் மரண அவதியில் அகப்பட்டவன். யூதர்களால் ஒன்றுகுறைய நாற்பதடியாக ஐந்துதரம் அடிபட்டேன், மூன்றுதரம் மிலாறுகளால் அடிபட்டேன், ஒருதரம் கல்லெறியுண்டேன், மூன்றுதரம் கப்பற்சேதத்தில் இருந்தேன், கடலிலே ஒரு இராப்பகல் முழுவதும் போக்கினேன். அநேகந்தரம்பிரயாணம்பண்ணினேன்; ஆறுகளால் வந்த மோசங்களிலும், கள்ளரால் வந்த மோசங்களிலும், என் சுயஜனங்களால் வந்த மோசங்களிலும், அந்நிய ஜனங்களால் வந்த மோசங்களிலும், பட்டணங்களில் உண்டான மோசங்களிலும், வனாந்தரத்தில் உண்டான மோசங்களிலும், சமுத்திரத்தில் உண்டான மோசங்களிலும் கள்ளச்சகோதரரிடத்தில் உண்டான மோசங்களிலும்; பிரயாசத்திலும், வருத்தத்திலும், அநேகமுறை கண்விழிப்புகளிலும், பசியிலும், தாகத்திலும், அநேகமுறை உபவாசங்களிலும், குளிரிலும், நிர்வாணத்திலும் இருந்தேன். இவை முதலானவைகளையல்லாமல், எல்லாச் சபைகளைக்குறித்தும் உண்டாயிருக்கிற கவலை என்னை நாள்தோறும் நெருக்குகிறது.*

வெளிப்படுத்தின விசேஷம் 14:13ன் ஆசீர்வாதங்கள் யாருக்கேனும் நடைமுறைப்படும் என்றால், அது பவுலுக்கு நிச்சயமாகவே நடைமுறைப்படும்: "கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இதுமுதல் பாக்கியவான்கள் ... அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள்." பவுலுக்கு மரணம் என்பது, பாவம், வியாதி மற்றும் கவலை ஆகியவற்றில் இருந்து விடுதலை என்பதாக இருந்தது.

இருப்பினும் நாம் 21ம் வசனத்தின் முதல் மற்றும் நிறைவுப் பகுதிகளை ஒன்றாகக் காத்துக் கொள்வதில் கவனமாக இருக்கக் கடவோம். "கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்." "*கிறிஸ்துவுக்காக* வாழ்ந்தால்" *மாத்திரமே* "சாவு என்பது ஆதாயமாக" இருக்கிறது. வெளிப்படுத்தின விசேஷம் 14:13ன் ஆசீர்வாதங்கள், "*கர்த்தருக்குள்* மரிக்கிறவர்களுக்கானதாக" உள்ளது. கோடிட்ட இடத்தை நிரப்பும் பயிற்சிக்குச் சற்று நேரம் திரும்பவும் செல்லுங்கள். நேர்மையாகக் கூறவேண்டும் என்றால், "பணம் அல்லது சந்தோஷம் அல்லது கிறிஸ்துவைத் தவிர வேறு ஏதாவது எனக்கு ஜீவன்" என்று நீங்கள் சொல்ல வேண்டியிருந்தால் நிலைமை என்னவாக இருக்கும்? இங்கு நிரப்புவதற்கு மற்றசில வாக்கியங்கள் தரப்படுகின்றன: "பணம் எனக்கு ஜீவன் என்றால், சாவு எனக்கு __________"; "சந்தோஷம் எனக்கு ஜீவன் என்றால், சாவு எனக்கு __________ ." இந்தக் கோடிட்ட இடங்களை எவ்வாறு நிரப்புவது என்று

*நீங்கள் உறுதியாக அறியாதிருந்தால், இதற்குப் பதிலானது மத்தேயு 16:26ல் மறைமுகமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது: "மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்?" கிறிஸ்து உங்களுக்கு ஜீவனாக இருந்தால், சாவு என்பது ஆதாயமாக இருக்கும். வேறு ஏதாவது உங்களுக்கு ஜீவனாக இருந்தால், சாவு என்பது உங்களுக்கு நஷ்டமாக இருக்கும்.*

## ஜீவனுக்கு ஆதரவானவை

22ம் வசனத்தின் முதல் பாகத்தில், வாழ்வதற்காக இன்னொரு காரணத்தைப் பவுல் கொடுத்தார்: *ஜீவன் = பலனுள்ள கிரியை.* "ஆகிலும் சரீரத்தில் பிழைத்திருக்கிறதினாலே[8] என் கிரியைக்குப் பலனுண்டாயிருப்பதால் ..." அவர் பிழைத்திருக்க வேண்டுமென்றால், அவர் தமது ஊழிய முயற்சிகளை விரிவாக்க, போதிக்கவும் மற்றும் கர்த்தருக்குக் கனிகளைச் சேகரிக்கவும், வாய்ப்புக் கொண்டிருப்பார்.

என்ன ஒரு கடினமான தெரிவு! 22ம் வசனத்தின் கடைசிப் பகுதி இது எவ்வளவு கடினமானது என்பதை வலியுறுத்துகிறது: "நான் தெரிந்துகொள்ளவேண்டியது இன்னதென்று அறியேன்." "அறிதல்" என்று தரவழைக்கப்பட்டுள்ள (Gk.: *gnorizo*) வார்த்தையானது "அறியச் செய்தல்" அல்லது "வெளிப்படுத்துதல்" என்று அர்த்தப்படுகிறது.[9] NKJV வேதாகமத்தில் "நான் எதைத் தேர்ந்து கொள்வேன் என்று என்னால் கூற முடியவில்லை" என்றுள்ளது. முடிவாகப் பவுல் இந்த விஷயத்தைத் தேவனுடைய கரங்களில் ஒப்புவிப்பார். அவர் யாக்கோபு 4:15ன் தத்துவத்தில் நம்பிக்கை கொண்டிருந்தார்: "*ஆண்டவருக்குச் சித்தமானால்,* ... உயிரோடிருந்தால், இன்னின்னதைச் செய்வோம்" (என்னால் வலியுறுத்தப்படுகிறது).

## மரணத்திற்கு ஆதரவானவை

முடிவெடுத்தல் சிரமமானதாக இருந்தாலும், பவுல் தமக்குச் சொந்தமான ஒரு விருப்பத் தேர்வைக் கொண்டிருந்தார். 23ம் வசனத்தின் கடைசிப் பகுதி, அவர் மரணத்தைத் தேர்ந்து கொள்ள ஒரு உச்சபட்சமான காரணத்தைக் கொடுக்கிறது: *மரணம் = கர்த்தருடனே இருக்கும்படி பிரிதல்.* "... தேகத்தைவிட்டுப் பிரிந்து, கிறிஸ்துவுடனேகூட இருக்க எனக்கு ஆசையுண்டு, அது அதிக நன்மையாயிருக்கும்." "கர்த்தருடன் இருக்கும்படி பிரிதல்" என்பது எவ்வளவு நேர்த்தியானதாக இருக்கும் என்பதை வலியுறுத்துவதற்கு, அப்போஸ்தலர் மூன்று ஒப்பீடுகளைப் பயன்படுத்தினார். அது "*நன்மையானதாக*" மாத்திரமல்ல, ஆனால் "*அதிக நன்மையாயிருக்கும்.*" அது "*மிக அதிக நன்மையாய் இருக்கும்*"! [இவ்விடத்தில் NASB வேதாகமத்தில் "very much better" என்றுள்ளது.]

இந்த வாழ்வை விட்டுப் பிரிதல் எவ்வளவு மேன்மையாக இருக்கும் என்பதை பவுல் எவ்வாறு அறிந்தார்? அவர் "மூன்றாம் வானம்வரைக்கும் ... பரதீசுக்குள் எடுக்கப்பட்ட" போது, அனேகமாக, வரவிருக்கும் உலகத்தில் மகிமை பற்றிய கணநேரத் தோற்றம் அவருக்குத் தரப்பட்டிருக்கலாம் (2 கொரிந்தியர் 12:1-4). வரவிருக்கும் வாழ்வைக் கண்டிருந்தவருக்கு இந்த வாழ்வு எவ்வாறு காணப்பட்டிருக்கும் என்பதைப் பற்றி நான் வியப்படைகிறேன். இந்த வாழ்வின்

மிகவும் அழகிய விஷயங்கள்கூட, நேரெதிர் ஒப்பீட்டில் அழகற்றவையாகக் காணப்பட்டிருக்க வேண்டும்; மிகவும் விலையுயர்ந்த பொருட்கள்கூட மதிப்பற்றவைகளாகக் காணப்பட்டிருக்க வேண்டும்! நமக்காகத் தேவன் வைத்துள்ளவை பற்றி ஏவுதல் பெற்ற விவரிப்புகளை நாம் வாசித்து, நமது நித்திய வீடு எதைப்போன்று இருக்குமோ என்று நாம் ஆச்சரியப்படுகிறோம். இருப்பினும் பவுல், ஏறக்குறைய நிச்சயமாகவே அதை *அனுபவித்திருந்தார்.* 2 கொரிந்தியர் 12ம் அதிகாரம் கேள்விப்படுதலை மாத்திரம் குறிப்பிடுகையில், பரதீசு எதைப்போன்று உள்ளது என்பதைப் பவுல் மற்ற வழிகளில் அனுபவித்து இருக்க வேண்டும். தனிமையின் கணங்களில், வேதனை மற்றும் துக்கம் நிறைந்த இவ்வுலகத்தை விட்டுப் பரதீசுக்குத் திரும்ப வேண்டும் என்ற ஏக்கம் எவ்வளவாக அவர் ஆத்துமாவை நிரப்பி இருக்க வேண்டும்!

23ம் வசனத்தில் பவுல், மரணத்திற்கு அழகுநிறைந்த நற்கூற்று ஒன்றைப் பயன்படுத்தினார்: "தேகத்தைவிட்டுப் பிரிந்து, கிறிஸ்துவுடனேகூட இருக்க." "பிரிந்து" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது (*analuo*) என்பதன் ஒரு வடிவம், "மேலே" (*ana*) என்பதற்கான முன்னிடைச் சொல்லையும் "தளர்த்த" (*luo*) என்று அர்த்தப்படும் வினைச்சொல்லையும் ஒன்றிணைக்கும் ஒரு கூட்டு வார்த்தையாக உள்ளது. இவ்வார்த்தை, ஒரு கூடாரத்தைக் கலைத்து எடுத்துச் செல்வதற்கும் கப்பலை அதன் கட்டுக்களில் இருந்து விடுவித்து நகர்த்துவதற்கும், ஒரு அடிமையை அல்லது சிறைப்பிடிக்கப்பட்டவரை விடுதலையாகிச் செல்ல அனுமதிப்பதற்கும் பயன்படுத்தப்பட்டது.[10] பவுல் மரணத்தை "பிரிந்து செல்லுதல்" என்ற வகையில் கண்ணோக்கினார் - நாமும்கூட அதை அவ்வாறே கண்ணோக்க வேண்டும், கிறிஸ்தவர்களைப் பொறுத்தமட்டில் இந்த வாழ்வானது ஒரு பயணமாக உள்ளது, கிறிஸ்துவுடன் இருத்தல் என்பதே அடைவிடமாக உள்ளது. சட்டப்படி, மரணம் என்பது அந்த அடைவிடத்தைச் சென்று சேர அத்தியாவசியமான பாகமாக உள்ளது. கர்த்தர் மறுபடி வருகிறபோது இன்னமும் உயிரோடிருக்கும் விசுவாசம் நிறைந்த கிறிஸ்தவர்கள் இதற்கு ஒரு விதிவிலக்காக இருப்பார்கள்.

பவுலுக்கு மரணம் = கிறிஸ்துவுடன் இருத்தல் என்பதே 23ம் வசனத்தில் வலியுறுத்தமாக உள்ளது. அவருக்கு, மரணம் என்பது இந்த உலகத்தின் வேதனை மற்றும் பிரச்சனைகளில் இருந்து விடுதலையாக மாத்திரம் இருக்கவில்லை. அது மிக மிக அதிகமானதாக இருந்தது. மரித்தல் என்பது அவர் தமது விலையேறப் பெற்ற கர்த்தருடன் இருக்கச் செல்லுதல் என்று அர்த்தப்படுத்திற்று![11]

## ஜீவனுக்கு ஆதரவானவை

24ம் வசனத்தில் பவுல், வாழ்தலுக்கான இன்னும் ஒரு காரணத்தைப் பட்டியலிட்டார்: *வாழ்வு = மற்றவர்களுக்கு உதவி செய்யக் கூடுதலான வாய்ப்புகள்.* "அப்படியிருந்தும், நான் சரீரத்தில் தரித்திருப்பது உங்களுக்கு அதிக அவசியம்." மரணத்திற்குப் பின்பு இயேசுவுடன் இருத்தல் "மிக மிக நல்லதாக" இருந்தது, ஆனால் வாழுதலும் மற்றவர்களுக்கு உதவுதலும் "மிகவும் அவசியமாக" இருந்தது. நீங்கள் நமது கற்பனையான தாளில் "மதிப்பெண்" போட்டுக்கொண்டிருந்தால், அது "ஜீவனுக்கு ஆதரவானவை" என்பதன் கீழ் *மூன்று* விஷயங்களையும் "மரணத்திற்கு ஆதரவானவை" என்பதன் கீழ் *இரண்டு* விஷயங்களையும் மாத்திரம் கொண்டிருக்கும்.

21முதல் 24 வரையிலான வசனங்களைத் திரும்பவும் வாசியுங்கள். அந்த வகையான எண்ணப்போக்குடன் [சிந்தனையுடன்] இருக்கும் கிறிஸ்தவரை எதுவும் துன்பப்படுத்த முடியாது. அவர் வாழப் போகிறாரா? அது நல்லது; வாழுதல் என்பது அவருக்கு அவரது தாலந்துகளைக் கர்த்தருக்காகப்பயன்படுத்த அதிக வாய்ப்புக்களைக் கொடுக்கும். அவர் மரிக்கப் போகிறாரா? அதுவும் நல்லதாகவே உள்ளது. அவர் தமது கர்த்தருடன் இருக்கச் செல்ல முடியும். இருப்பினும் அப்படிப்பட்ட எண்ணப்போக்கு [சிந்தை] இயேசுவுடன் சரியான உறவு முறையைக் கொண்டிருத்தலையே அடிப்படையாகக் கொண்டு அமைகிறது என்பதை ஒருக்காலும் மறக்கவேண்டாம். "கிறிஸ்து எனக்கு ஜீவன்" என்று பவுலுடன் சேர்ந்து கூறக்கூடியவராக இருத்தலே திறவுகோலாக உள்ளது.

## பவுலின் தீர்மானம் (1:25, 26)

25 மற்றும் 26ம் வசனங்களில், முந்திய நிச்சயமற்ற தன்மையிலிருந்து எதிர்பாராத மாறுதல் ஒன்றுள்ளது: "இந்த நிச்சயத்தைக்கொண்டிருந்து, நான் மறுபடியும் உங்களிடத்தில் வருகிறதினால் என்னைக்குறித்து உங்களுடைய மகிழ்ச்சி[12] கிறிஸ்து இயேசுவுக்குள் பெருகும்படிக்கு, உங்கள் விசுவாசத்தின் வர்த்தனைக்காகவும் சந்தோஷத்துக்காகவும் நான் பிழைத்து, உங்கள் அனைவரோடுங்கூட இருப்பேனென்று அறிந்திருக்கிறேன்." அந்த வேளையில் பவுல் கர்த்தரிடத்தில் இருந்து ஒரு விசேஷித்த வெளிப்படுத்துதலைக் கொண்டிருந்தார் என்று சிலர் யூகித்திருக்கின்றனர். அவர் "அப்படியிருந்தும், நான் சரீரத்தில் தரித்திருப்பது *உங்களுக்கு* அதிக அவசியம்" என்று கூறியபோது (வசனம் 24; என்னால் வலியுறுத்தப்படுகிறது), அது அவரது சிந்தையில் இந்தப் பிரச்சனையைத் தீர்த்து வைத்தது என்பதே மிகவும் ஏற்புடையதாக உள்ளது. பவுல், பொறுப்புணர்வின் ஆழமான சிந்தையைச் கொண்டிருந்தார். அவர் சுயநலமற்றவராக இருந்தார். அவர் மற்றவர்களுக்கு "ஆம்" என்று சொல்வதற்காகத் தமக்கு "இல்லை" என்று சொல்லிக் கொண்டார்.

பவுலின் தீர்மானத்தை மிகவும் முழுமையாக மதித்து உணர்வதற்கு நாம், 25 மற்றும் 26ம் வசனங்களில் உள்ள சில வார்த்தைகளை ஒவ்வொன்றாக பரிசீலனை செய்வோம். முதலில் அப்போஸ்தலர், "இந்த நிச்சயத்தைக் கொண்டிருந்து" என்று கூறினார். அவர் தமது வாசகர்களுக்காகத் தாம் மாம்சத்தில் தரித்திருப்பது "அதிக அவசியமாக" இருந்தது என்று நிச்சயம் கொண்டிருந்தார்.

பின்பு அவர், "உங்கள் அனைவரோடுங்கூட இருப்பேனென்று அறிந்திருக்கிறேன்" என்று கூறினார். வேறு வார்த்தைகளில் கூறுவதானால் "நான் ஜீவித்திருப்பேன் என்று நான் அறிந்திருக்கிறேன்." "அறிந்திருக்கிறேன்" என்ற சொற்றொடர் தொடக்கத்தில் அவ்வளவு நிச்சயமானதாக இராதிருக்கலாம். [ஆனால்] பவுல் விசாரிக்கப்படும்போது மிகச்சரியாக என்ன நடக்கும் என்பது பற்றிப் பவுலின் சிந்தையில் கேள்விகள் இருந்தன என்பதைச் சந்தர்ப்பப் பொருள் சுட்டிக்காண்பிக்கிறது. இருந்த போதிலும், அவர் அனேகமாக விடுதலை செய்யப்படுவார் என்றும் பிலிப்பியர்களைத் திரும்பவும் காண்பார் என்றும் அவர் பலமாக உணர்ந்தார். ஏறக்குறைய அதே வேளையில், பவுல் பிலேமோனுக்கு எழுதிய நிருபத்தில், பிலோமோனை விரைவில் தாம் சந்திப்பதை

எதிர்பார்ப்பதாகக் கூறினார் (பிலேமோன் 22).

''நான் பிழைத்து, உங்கள் அனைவரோடுங்கூட இருப்பேன்'' என்பது ஒரு சொல்லாடலாக உள்ளது. "பிழைத்து" மற்றும் "இருப்பேன்" என்ற இரு வார்த்தைகளும் ஒரே வேர் வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளன: ''பிழைத்து'' என்பது *meno* என்ற வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டிருக்கையில், "இருப்பேன்" என்பது, *meno* என்ற வார்த்தையை "உடன்" என்று அர்த்தப்படும் *para* என்ற முன்னிடைச் சொல்லுடன் இணைத்துப் பெற்ற ஒரு கூட்டு வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. பவுல், "நான் உங்கள் *பக்கமாக* இருப்பேன். நான் *உங்களோடு* இருப்பேன்" என்று கூறினார்.

இது பிலிப்பியர்களின் ''விசுவாசத்தின் வர்த்தனைக்காகவும் சந்தோஷத்துக்காகவும்" பங்களிக்கும். "விசுவாசம்" என்பது இயேசுவின் மீதான விசுவாசத்தில் மையங்கொண்டுள்ள போதனையின் பொருளை - அதாவது, புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்தப்பட்டபடி கிறிஸ்தவ முறைமையின் முழு போதனையை - குறிக்கிறது. பிலிப்பியர்கள் விசுவாசத்தில் "சந்தோஷம்" அடைய முடியும்படிக்கு, அவர்கள் விசுவாசத்தில் "வர்த்திக்க [வளர] வேண்டும் என்று பவுல் விரும்பினார். விசுவாசத்தில் சந்தோஷம் கொண்டிருக்க, விசுவாசத்தில் வர்த்தனை [வளர்ச்சி] என்பது அவசியமாக உள்ளது.

பவுல் மறுபடியும் பிலிப்பியர்களிடத்தில் "வருவதன்" மூலமாக, "கிறிஸ்து இயேசுவுக்குள் அவர்களின் மகிழ்ச்சி பெருகும்" என்பதே பிலிப்பியர்களின் முடிவு விளைவாக இருக்கும்.

> ... அவரது "வருகை" (*parousia*) விசேஷித்த அர்த்தம் கொண்டிருக்கும். இவ்வார்த்தை தொடக்கத்தில், வெற்றிபெற்றவர் அல்லது அரசர் ஒருவர் ஒரு நகருக்குள் சடங்காச்சாரமாகப் பிரவேசிப்பதைக் குறித்தது. பவுல் வந்தார் என்றால் வெற்றியின் ஒரு கருத்துணர்வு இருக்கும், ஆனால் அவர் வரவில்லை என்றாலும் தோல்வி எதுவும் இராது. இதே சொற்றொடர் கிறிஸ்துவின் வருகைக்கும் அரை - நுட்ப வார்த்தையாக உள்ளது (1 தெசலோனிக்கேயர் 2:19; 3:13; 4:15; 5:23).[13]

25 மற்றும் 26ம் வசனங்களில் இருந்து நாம், பல பாடங்களைச் சேகரிக்க முடியும். அவற்றில் ஒன்று இங்குள்ளது: நமக்கு மிகச்சிறந்தது எது என்பதன் அடிப்படையில் மாத்திரம் நமது தீர்மானங்கள் இருக்கக்கூடாது. ஆனால் மற்றவர்களுக்கு மிகச் சிறந்தது என்ன என்பதும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். மரணம் நெருங்குகையிலும்கூட, பொதுவான முடிவுகளை மேற்கொள்ளுதல் பற்றிய விஷயத்தில் இது உண்மையாக உள்ளது. இன்றைய நாட்களில் உலகின் குறிப்பிட்ட பாகங்களில், "யூத்தனேஷியா'' அல்லது "கருணைக்கொலைகள்" பற்றி அதிகமானவை கூறப்பட்டுள்ளன. ''Euthanasia'' என்பது "நன்மை" அல்லது "நலம்" என்று அர்த்தப்படுகிற ஈற்றுச் சொல்லை (*eu*) "மரணம்" என்பதற்கான வார்த்தையுடன் (*thanatos*) இணைந்துள்ள கிரேக்க வார்த்தையின் ஆங்கிலப்படுத்தப்பட்ட சொல்லாக உள்ளது. இதன் வினை வடிவம் ''நல்லபடியாக இறத்தல்'' என்று அர்த்தப்படுகிறது; இவ்வார்த்தை வழக்கமாகப் பயன்படுத்தப்படுகிறபடி, இது ஒரு தவறான பயன்பாடாக உள்ளது.

"கர்த்தருக்குள்" இறத்தல் ஒன்றே "நல்ல" மரணமாக உள்ளது. தற்கொலை என்பது கிறிஸ்தவர்களுக்குத் தெரிவாக இருப்பதில்லை. இப்படிப்பட்ட தேவபக்தியற்ற விவாதங்கள் எல்லாமும் இல்லை என்றாலும், இவற்றில் பெரும்பான்மையான விவாதங்கள் முற்றிலும் சுயத்தை மையங்கொண்டுள்ளன. ஒரு கிறிஸ்தவர் தமது மரணத்தின் வேளையைத் தேவனுடைய கரங்களில் ஒப்புவிக்கிறார். அவர் உதவியுடனான அல்லது உதவியற்ற வகையிலான தற்கொலை மூலமாக "சுலபமாகத் தப்பிச் செல்லுதல்" என்பதைத் தெரிவு செய்வதில்லை. ஒரு கிறிஸ்தவர், இறக்கும்போதுகூட, இன்னொரு நபருக்கு உதவியாயிருக்கும் ஒரு வார்த்தையைக் கூற இன்னும் ஒரு வாய்ப்பை அடிக்கடி காண முடியும். வேறு எதுவும் இல்லை என்றாலும், இறக்கும் கிறிஸ்தவர், கர்த்தருக்குள் தைரியமாக இறப்பது எப்படி என்பதற்கு ஒரு உதாரணமாக இருக்க முடியும்.

## பவுலின் உய்த்துணர்வு (1:27-30)

27ம் வசனத்தில் பவுல், தத்துவத்தில் இருந்து நடைமுறைக்கு மாறினார். 27 முதல் 30 வரையில் உள்ள வசனங்கள் நமது அடுத்த பாடத்தில் அதிக விபரமாக எடுத்துரைக்கப்படும், ஆனால் இறையியல் என்பது பவுலுக்கு வெறும் கற்பிதக் கோட்பாடாக மாத்திரம் ஒருக்காலும் இருந்ததில்லை என்பதைக் குறிப்பிடாது இந்தப் பாடத்தை முடிக்க நான் விரும்பவில்லை. அது எப்போதுமே செய்முறை மற்றும் தனிப்பட்ட நடைமுறைப்படுத்தலைக் கொண்டிருந்தது. இவ்விடத்தில் அப்போஸ்தலர், எழுதப்பட்டவற்றிருந்தவற்றைத் தமது வாசகர்கள் புரிந்து கொள்ளுதலானது அவர்களின் வாழ்வில் செயல் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று அறிய வேண்டும் என விரும்பினார்.

முதலாவது, அது அவர்களை *விசுவாசம் நிறைந்த* கிறிஸ்தவ வாழ்வை வாழும்படி தூண்டுவதாக இருக்க வேண்டும்: "நான் வந்து உங்களைக் கண்டாலும், நான் வராமலிருந்தாலும், நீங்கள் ஒரே ஆவியிலே உறுதியாய் நின்று, ஒரே ஆத்துமாவினாலே சுவிசேஷத்தின் விசுவாசத்திற்காகக் கூடப்போராடி, எதிர்க்கிறவர்களால் ஒன்றிலும் மருளாதிருக்கிறீர்களென்று உங்களைக் குறித்து நான் கேள்விப்படும்படி, எவ்விதத்திலும் நீங்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குப் பாத்திரராக மாத்திரம் நடந்துகொள்ளுங்கள்" (வசனம் 27). அவர்களைத் திரும்பவும் காணும்படிக்கான தமது விருப்ப நோக்கத்தை அவர் சுட்டிக் காண்பித்து இருந்தார் (வசனம் 26). இப்போது செயல்விளைவில் அவர், "அது நடந்தாலும் இல்லை என்றாலும், உங்கள் வாழ்வு முறைகள் சுவிசேஷத்திற்கு இசைவானதாக உள்ளன என்று நான் அறிய விரும்புகிறேன்" என்று கூறினார்.

இரண்டாவது, அவர்கள் *தைரியமான* கிறிஸ்தவ வாழ்வை வாழும்படி அசைக்கப்பட வேண்டும்:

> *நீங்கள் மருளாதிருக்கிறது அவர்கள் கெட்டுப்போகிறதற்கும், நீங்கள் இரட்சிக்கப்படுகிறதற்கும் அத்தாட்சியாயிருக்கிறது; இதுவும் தேவனுடைய செயலே. ஏனெனில் கிறிஸ்துவினிடத்தில் விசுவாசிக்கிறதற்குமாத்திரமல்ல, அவர் நிமித்தமாகப் பாடுபடுகிறதற்கும் உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது. நீங்கள் என்னிடத்திலே கண்டதும் எனக்கு உண்டென்று இப்போழுது கேள்விப்படுகிறதுமான போராட்டமே உங்களுக்கும் உண்டு (வசனங்கள் 28-30).*

*அவர்கள், பவுல் கொண்டிருந்த "அதே போராட்டத்தை" (உபத்திரவத்தை)க் கொண்டிருந்தனர், எனவே அவர்கள் அதே முடிவிற்கு வர வேண்டும்: "நாம் வாழ்ந்தாலும் மரித்தாலும், எல்லாமும் தேவனுடைய மகிமைக்காகவே செய்யப்பட முடியும்!" பவுல் அஞ்சவில்லை, எனவே அவர்கள் அஞ்சுவதற்குக் காரணம் இல்லாதிருந்தது.*

## முடிவுரை

*"இருப்பதா அல்லது இல்லாது ஒழிவதா?" வாழ்வா அல்லது மரணமா? நீங்கள் ஹாம்லெட்டின் கேள்வியைக் கேட்காதிருக்கலாம், மற்றும் நீங்கள், பவுல் செய்தது போன்று மாற்றுச் செயல்கள் பற்றி ஆழ்ந்து சிந்திக்காது இருக்கலாம். நேர்மையாகக் கூறினால், நம்மில் பெரும்பான்மையானவர்கள், மரணத்தைப் பற்றி நினைக்க விரும்புவதில்லை. உண்மையில், சிலர் அந்தப் பாடக்கருத்தைத் தவிர்ப்பதற்கு வெகுதூரம் செல்கின்றனர்.*

> *வில்லியம் ரான்டால்ஃப் ஹெர்ஸ்ட் என்பவர், "என் முன்னிலையில் 'மரணம்' என்ற வார்த்தையை ஒருக்காலும் பயன்படுத்தாதீர்கள். அதைக் கேட்க நான் விரும்பவில்லை" என்று கூறினார். ஆஸ்கார் லெவென்ட் என்பவரும் அதே வேண்டுகோளை விடுத்தார். பழங்கால அரசர்களில் ஒருவர் அவ்வாறே உணர்வு கொண்டிருந்தார், அவரது வாகனம், ஒரு கல்லறையைக் கடந்து செல்லும்படி இழுத்துச் செல்லப்பட்டபோது, மனிதர்களின் அழிவின் சத்தமிடாத எச்சங்களைக் காண வேண்டியிராதபடிக்கு அந்த வாகனத்தின் திரைகள் மூடும்படி இழுக்கப்படச் செய்தார்.[14]*

*இருந்தபோதிலும் மரணம் என்பது ஒரு உண்மை நிலையாக இருக்கிறது. "அன்றியும், ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது" (எபிரெயர் 9:27). நாம் இறந்து போவோமா என்பதல்ல ஆனால் நாம் இறக்கத்* தயாராக இருப்போமா *என்பதே கேள்வியாக உள்ளது. நீங்கள் இந்தப் பாடத்திலுள்ள எதையும் நினைவில் வைக்காவிட்டாலும், பின்வருவதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்: வாழத்தயாராக இராத வரையிலும் எந்த நபரும் சாகத் தயாராவதில்லை. சாகத் தாயராயிருக்க நீங்கள் "*கிறிஸ்து *எனக்கு ஜீவன்" என்று உண்மையுடன் கூறக் கூடியவர்களாக இருக்க வேண்டும். கிறிஸ்து உங்களுக்கு அர்த்தப்படுத்துவது என்ன? நீங்கள் உங்கள் வாழ்வை அவருக்கு கொடுத்திருக்கிறீர்களா? இல்லை என்றால், அந்த உறுதிப்பாட்டை மேற்கொள்ளாமல் இன்னொரு நாள் உங்களைக் கடந்து செல்ல அனுமதிக்காதீர்கள்!*

## குறிப்பு

*இந்தப் பாடத்தை நீங்கள் முடிக்கையில், உங்கள் உரையைக் கேட்பவர்களுக்கு, நம்பிக்கை வைத்துக் கீழ்ப்படிதலில் கிறிஸ்துவினிடத்தில் வருதல் எவ்வாறு என்று கூற நீங்கள் விரும்பலாம் (யோவான் 14:15; மாற்கு16:16; கலாத்தியர் 3:26, 27).*

குறிப்புகள்

[1]ஆங்கிலக் கவிஞரும் நாடக ஆசிரியருமான வில்லியம் ஷேக்ஸ்பியர் (ஏறத்தாழ 1564-1616) என்பவர் மேற்கத்திய நாகரீக வரலாற்றில் மிகவும் செல்வாக்குள்ள இலக்கியப் படைப்புகளை எழுதினார். டென்மார்க் இளவரசனான ஹாம்லெட் என்பவரின் துக்கமான வரலாறு 1600 வாக்கில் எழுதப்பட்டது. பாகம் III, காட்சி 1ல், ஹாம்லெட்டின் தனிமைப் புலம்புதல் காணப்படுகிறது. "தனிமைப் புலம்புதல்" என்பது ஒரு பாத்திரப் படைப்பு தனக்குத்தானே பேசிக்கொள்வதன் மூலம் தனது சிந்தனைகளைப் பார்வையாளர்களுக்கு வெளிப்படுத்துவதற்கான ஒரு செயல்முறையாக உள்ளது. [2]William Barclay, *The Letters to the Philippians, Colossians, and Thessalonians,* rev. ed., The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1975), 27. [3]Pat Edwin Harrell, *The Letter of Paul to the Philippians,* The Living Word Commentary series, ed. Everett Ferguson [Austin, Tex.: R. B. Sweet Co., 1969], 73. [4]ஹாம்லெட் "ஒரு தோல்வி - தோல்வி சூழ்நிலையில்" இருக்கையில், பவுல் "ஒரு வெற்றி - வெற்றி சூழ்நிலையில்" இருந்தார். [5]பவுல் தமது வார்த்தைகளை மற்றவர்களை நோக்கிக் கூறினார் என்றாலும், பல எழுத்தாளர்கள் இவ்வசனப்பகுதியை ஹாம்லெட்டின் தனிமைப் புலம்பலுடன் ஒப்பிட்டுள்ளனர். வாழ்வு மற்றும் மரணம் பற்றிய அப்போஸ்தலரின் இந்தக் கலந்துரையாடலை காஃப்மேன் என்பவர், "பவுலின் மாபெரும் தனிமைப் புலம்பல்" என்று அழைத்தார் (James Burton Coffman, *Commentary on Galatians, Ephesians, Philippians, Colossians* [Austin, Tex.: Firm Foundation Publishing House, 1977], 270). [6]நான் வாழும் இடத்தில், அவர் ஒவ்வொரு தலைப்பின்கீழும் "ஆதரவான" விஷயங்களை அவர் இட்டார் என்று கூறுவோம். நாங்கள் "pro" and "con" என்ற சொல்விளக்கத்தைப் பயன்படுத்துகிறோம். "Pro" என்பது "ஆதரவான" என்பதற்கான இலத்தீன் சொல்லாக இருக்கையில், "con" என்பது "எதிரான" என்பதற்கான இலத்தீன் சொல்லாக உள்ளது. [7]Avon Malone, *Press to the Prize* (Nashville: 20th Century Christian, 1991), 39. [8]"இந்த சந்தர்ப்பப் பொருளில் 'மாம்சம்' (*sarki*) என்பது பவுலின் எழுத்துக்களில் அடிக்கடி பயன்படுத்தப்படுவதுபோன்று, மனித இயல்பை அதன் பலவீனங்களுடன் அர்த்தப்படுத்துவதாக இருப்பதில்லை (1 கொரிந்தியர் 1:29; கலாத்தியர் 2:16; ரோமர் 7:25; 8:4-9), ஆனால் இது 'சரீரம்' (வசனம் 20) என்பதற்குச் சமமானதாக மாத்திரம் உள்ளது" (Harrell, 72-73). [9]*The Analytical Greek Lexicon* (London: Samuel Bagster & Sons, Ltd., 1971), 80. [10]இந்தச் சொற்றொடர், ஒரு கடினமான பிரச்சனையைத் தீர்த்துவைத்தல் போன்ற மற்ற வழிகளிலும் பயன்படுத்தப்பட்டது. இந்தப் பத்தியில் உள்ள தகவல்கள், Barclay, 28; Malone, 41; and Warren W. Wiersbe, *The Bible Exposition Commentary,* vol. 2 (Wheaton, Ill.: Victor Books, 1989), 70 என்ற புத்தகங்களில் இருந்து எடுத்தாளப்பட்டுள்ளன.

[11]"தேகத்தை விட்டுப் பிரிந்து கிறிஸ்துவுடனே கூட இருக்கும்படி" என்ற சொற்றொடராக்கத்தைப் பயன்படுத்தியதில், பவுல் லூக்கா 16ல் கிறிஸ்துவால் சித்தரிக்கப்பட்ட விஷயமான மரித்தோர் இடைநிற்கும் இடம் என்பது இல்லை என்று கூறவில்லை. இயேசு பாதாளத்தின் வட்டாரத்தை ஆளுகை செய்கிறார் (வெளிப்படுத்தின விசேஷம் 1:18). இயேசுவுக்குள் மரித்தல் என்பது முழுமையான கருத்தில் "இயேசுவுடன் இருத்தல்" என்று இருக்க வேண்டும் (காண்க 1 தெசலோனிக்கேயர் 5:10). இருப்பினும் இரண்டாம் வருகை மற்றும் நியாயத்தீர்ப்பின் நாளுக்குப்பின், நீதியுள்ளவர்கள் பரலோகத்திற்குச் செல்லும் போது, முழுமையான கருத்தில், பின்பு நாம் "இயேசுவுடன் இருப்போம்" (காண்க 1 தெசலோனிக்கேயர் 4:17). [12]"என்னைக்குறித்து உங்கள் மகிழ்ச்சி" என்பதன் நேரடி அர்த்தமான தரவழைத்தல், "மீண்டும் நான் உங்களிடத்தில் இருப்பதன் மூலமாக என்னைக் குறித்து நீங்கள் கிறிஸ்து இயேசுவுக்குள் மேன்மை பாராட்டி நம்பிக்கை

வைத்தல் பெருகும்" என்றிருக்கும். பிலிப்பியர்களின் மேன்மை பாராட்டுதலுக்குக் காரணமானவர் யார் என்பதை இவ்வசனப் பகுதி தெளிவாக்குவதில்லை. "கிறிஸ்து இயேசுவுக்குள்" மற்றும் "என்னைக் குறித்து" ஆகிய இரண்டுமே ஒன்று போன்ற கட்டமைப்புகளாக பக்கம் பக்கம் நிற்கின்றன. "கிறிஸ்து இயேசுவுக்குள்" என்பதற்கு முன்னர் "உங்கள் மகிழ்ச்சி" என்ற சொற்றொடர் வருவதால், கிறிஸ்து இயேசுவே அவர்களின் மகிழ்ச்சிக்குக் காரணமாக இருந்தார் என்பது எனது விருப்பத் தேர்வாக உள்ளது. விஷயம் இப்படி இருந்தால், பவுல் தாம் மறுபடியும் அவர்களிடத்தில் திரும்புதல், கர்த்தருக்குள் அவர்களின் சந்தோஷத்தைப் பெருகச் செய்யும் என்று நம்பியிருந்தார் என்றாகிறது. CJB வேதாகமத்தில், "பின்பு, உங்களுடன் நான் மீண்டும் இருப்பதன் மூலமாக, நீங்கள், மேசியாவை [இயேசுவை]க் குறித்து மேன்மை பாராட்ட இன்னும் மாபெரும் காரணம் கொண்டிருப்பீர்கள்" என்றுள்ளது. இவ்வசனம் ஆங்கிலத்தில் "Convinced of this, I know that I will remain and continue with you all for your progress and joy in the faith, so that your proud confidence in me may abound in Christ Jesus through my coming to you again" [NASB]. என்றுள்ளது. ஆனால் தமிழில் "இந்த நிச்சயத்தைக் கொண்டிருந்து, நான் மறுபடியும் உங்களிடத்தில் வருகிறதினால் என்னைக்குறித்து உங்களுடைய மகிழ்ச்சி கிறிஸ்து இயேசுவுக்குள் பெருகும்படிக்கு, உங்கள் விசுவாசத்தின் வர்த்தனைக்காகவும் சந்தோஷத்துக்காகவும் நான் பிழைத்து, உங்கள் அனைவரோடுங்கூட இருப்பேனென்று அறிந்திருக்கிறேன்" என்றுள்ளது. [13]Harrell, 77. [14]இந்தப் பத்தி, அவொன் மலோன் என்பவரால் தயாரிக்கப்பட்ட "பிலிப்பியருக்கு எழுதிய நிருபத்தின் ஆய்வு" என்ற விரிவுரையில் இருந்து தழுவப்பட்டது, இது 1984ம் ஆண்டு வாக்கில் "Truth in Love" (Fort Worth, Tex.), என்ற தொலைக்காட்சி நிகழ்ச்சியில் ஒளிபரப்பப்பட்டது. ஹெர்ஸ்ட் (1863-1951) என்பவர் அமெரிக்காவில் இருந்த ஒரு கோடீஸ்வரர் ஆவார், இவர் அச்சுப் பதிப்புத் துறையில் இருந்தவர் மற்றும் லெவன்ட் (1906-1972) என்பவர் இசையமைப்பாளராகவும் பியானோ இசைக்கலைஞராகவும் இருந்தார்.